**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23 ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

**O.S. NO. 685/2023**

**வா.சா.1**

**திரு. கோபாலகிருஷ்ணன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதல்விசாரணை தொடர்ச்சி**

நான் வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள 27-07-2017 தேதியிட்ட கடன் பத்திரம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 27-11-1996 தேதியிட்ட கிரையப்பத்திரம் எண். 2004/1996 நோட்டரி நகல் வா.சா.ஆ.2 ஆகவும், கோபாலின் இறப்பு சான்றிதழ் ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.3 ஆகவும், கோபாலின் வாரிசு சான்றிதழ் ஜெராபக்ஸ் நகல் வா.சா.ஆ.4 ஆகவும், 10-10-2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.5 ஆகவும், 10-10-2023 தேதியிட்ட அஞ்சல் ரசீது அசல் வா.சா.ஆ.6 ஆகவும், 10-10-2023 தேதியிட்ட அஞ்சல் ரசீது வா.சா.ஆ.7 ஆகவும், 10-10-2023 தேதியிட்ட அஞ்சல் ரசீது வா.சா.ஆ.8 ஆகவும், இணைய ஒப்புதல் அட்டை விபரம் (1ம் பிரதிவாதியுடையது) இணைய நகல் வா.சா.ஆ.9 ஆகவும், இணைய ஒப்புதல் அட்டை விபரம் (2ம் பிரதிவாதியுடையது) இணைய நகல் வா.சா.ஆ.10 ஆகவும், இணைய ஒப்புதல் அட்டை விபரம் (3ம் பிரதிவாதியுடையது) இணைய நகல் வா.சா.ஆ.11

ஆகவும் குறியீடு செய்யவேண்டுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.